

**FRIDAY**

**SERMON**

**25 JANUARY 2019**

**(18 JAMAD'UL AWWAL 1440 AH)**

**HADHRAT MUHYI-UD-DIN AL-KHALIFATULLAH**
**MUNIR AHMAD AZIM**

# "INTERCESSION "SHAFA'AH" IN ISLAM"

## "இஸ்லாமில் ஷாபா அத்" (பரிந்துரை)

**TAMIL VERSION / தமிழ் பதிப்பு**

சலாமிற்கு பிறகு தஷஹ்ஹுதும், தஅவ்வுசும், அல்.ஃ.பாத்திஹாவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீ.ஃ.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் தம் ஜுமா பேருரையினை ஆரம்பித்தார்.

இஸ்லாமில் "ஷாபா அத்" என்பது இன்று பல வடிவங்களாக பரிணமித்திருக்கின்றது. துரதிர்ஷட வசமாக, அந்த திருக் குர்-ஆன் வசனத்தை சில நபர்கள் தவறான நிலையில் விளக்கியுள்ளனர். அதாவது இறந்துபோன அவ்லியாக்கள் அல்லது நபிமார்கள், அவர்கள் பூமியில் வாழ்ந்திருப்பவர்களைப் போன்று என்றும் மனிதர்களுக்காக இறைவனிடம் அவர்கள் பரிந்துரைப்பார்கள் என்றும் இத்தகைய நபர்கள் நம்பிக்கைக்கொள்கின்றனர். அதன் விளைவாக

இவர்கள் அவ்லியாக்களை வணங்குவதற்காக முன்செல்லுகின்றனர்.. எல்லா பகுதிகளிலும் அத்தகைய தர்ஹாகளை (Mausoleums) அமைத்து வருகின்றனர்.

தனது பிரசங்கத்தினிடையே ஹுசூர் அவர்கள் இந்த வாரம் மேற்கொண்ட ஒரு முக்கியமான தப்லீக் (Tabligh) செய்தியை கூறினார். எல்லாம் இழந்த, ஆனால் மிக பெரிய செல்வந்தராக இருந்த ஒரு முஸ்லீம் குடும்பம். எப்போதெல்லாம் அக்குடும்பத்திற்கு இழப்பு மற்றும் தீங்கினை எதிர்கொள்ள நேர்ந்ததோ அப்போதெல்லாம் அக் குடும்பத்தினர் அல்லாஹ்வின் பால் திரும்புவதற்கு பதிலாக முல்லாகளையும் மௌலவிகளையும் சந்தித்து வந்தனர். அந்த மத குருக்கள் அவர்களை தவறான வழியில் திருப்பிக்கொண்டனர். உங்களுக்காக நாங்கள் பிரார்த்தனை செய்வோம் என கூறி, அவர்களிடமிருந்து பணத்திற்கு மேல் பணத்தை கைபற்றி வந்தனர். அல்லாஹ்வின் பக்கம் இந்த குடும்பத்தை திருப்புவதற்கான ஆலோசனைகள் வழங்குவதற்கு பதிலாக தங்களது வயிறை நிறைத்துக் கொள்வதற்கான முயர்ச்சிகளில் அவர்கள் ஈடுப்பட்டனர். தர்ஹாகளில் மறையடக்கப்பட்டிருக்கும் பீர்மார்களை அழைத்து பிரார்தனை செய்ய வேண்டும் என அக்குடும்பத்தினரை அவர்கள் அறிவுரைத்தனர். இது என் கவனத்திற்க்கு வநத்து. ஹுசூர் (அலை) அவர்கள் தொடர்ந்து கூறினார்கள்.

அதைப்போலவே, தர்ஹா கட்டுமானபணிகளுக்காக மிக அதிகமளவு செல்வங்களை சிலவு செய்த எனது ஒரு நண்பனும் இருந்தார். இந்த இருவருக்கும் இஸ்லாமின் உண்மையான போதனைகளை நான் விளக்கியபோது, அதாவது வணக்கத்திற்குரியவன் நம் அல்லாஹ் மட்டுமே என நான் அவர்களை அறிவுரைத்தபோது, என் நண்பர் உட்பட அவ்விருவரும் எனக்கு எதிராக திரும்பிக்கொண்டனர். ஹுசூர், அவர்களிடம் **"நீங்கள் விரும்பினாலும் சரி, விரும்பாமலிருந்தாலும் சரி, செய்தியை எட்டவைப்பது மட்டுமே எனது கடமை"** என்றார்.

அந்நிலையில் ஹுசூர் (அலை) அவர்களும் கோபம் கொண்டவாறு இருந்தார்கள். ஏனெனில் அவர்கள் அல்லாஹ்வின் வழியிலிருந்து அவர்களை திருப்பிக் கொண்டார்கள். அவர்கள் தங்களது சுமைகளை அல்லாஹ்விடம் மட்டுமல்லாமல் வேறு சிலரிடத்திலும் ஒப்படைத்திருக்கின்றனர். இப்போதும்

இவ்வளவு அதிகம் இழப்பிற்கு ஆளாகி வருகிறோம், அது ஏன் என்பதை பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை. தண்ணீர் ஒழுகிசெல்வதை போன்று அவர்களின் செல்வங்கள் ஒழுகி செல்கிறது. இந்த முல்லாக்கள் செழித்து வருகின்றனர். அந்த முஸ்லீம் குடும்பத்தினை கடன் மற்றும் வறுமையின்பால் தள்ளிவிடுகின்றனர். அவர்களின் மனைகளின் பக்கம் பள்ளிவாயில் இருந்தால்கூட, அவர்கள் ஐய்ந்து வேளை தொழுகையினை கடைப்பிப்பதில்லை. ஆனால் அவர்கள் அவ்வபோது பலதரம் தர்ஹாகளில் செல்கின்றனர்.

அவர்களுக்கு "தஹஜ்ஜுத்" தொழுகை என்ன என்பது கூட தெரியாது. இந்த குடும்பம் நேர்மையுடன் அல்லாஹ்வின் பக்கம் திரும்பிருந்தால் நிச்சயமாக அல்லாஹ் அவர்களுக்கு உதவிப்புரிந்திருப்பான். ஆனால் அல்லாஹ்வை விட வேறு சிலருக்கு அவர்கள் முக்கியத்துவம் அளிக்கின்றனர்

நாம் உணர்ந்து கொள்ள வேண்டிய மிக முக்கியமான ஒன்று, அதாவது அல்லாஹ், மிகச்சிறந்த முறையில் தன் அடியாருக்கு பரிந்து பேசுபவனாக இருக்கின்றான். எல்லாவிதமான பாவங்களிலிருந்தும் தவறுகளிலிருந்தும் அவர்களுக்கு விடுதலையை அளிப்பவன் அவன்மட்டுமாவான். அவன் மன்னிப்பவனாக இருக்கிறான். தன்னுடைய மகிழ்ச்சி மற்றும் சொர்க்கத்தை தனது அடியாரை ருசிக்கவைப்பதற்கான ஆற்றலை கொண்டிருப்பவன் அவன்மட்டுமாவான். திரு குா-ஆனில் அல்லாஹ் கூறுகின்றான்.

**"நீர் கூறுவீராக: பரிந்து பேசுதல் எல்லாம் அல்லாஹ்வுக்கு உரியன." (39:45)**

அதுமட்டுமல்ல, அல்லாஹ் தனது சிறப்பான சில அடியார்களுக்கு தீர்ப்பு நாளில் தனது மற்று சில அடியார்களுக்கு ஆதரவாக பரிந்து பேசுவதற்கான அனுமதியை வழங்கியிருக்கின்றான். பின்வரும் திருக் குர்- ஆனின் வசனம் அவ்விஷயத்தின்பால் நம் கவனத்தை ஈர்க்கிறது.

**"அளவற்ற அருளாளனாகிய இறைவன் மகனை உருவாக்கிக் கொண்டான். என்று அவர்கள் கூறுகின்றனர். அவன் எல்லாப் பல வீனங்களிலிருந்தும் துய்மையானவன். அது மட்டுமன்று (அவர்கள் எவர்களை இறைவனுடைய மகன்கள் எனக் கூறுகின்றனரோ) அவர்கள் இறைவனுடைய கண்ணியமிக்க அடியார்களாவார்கள். அவர்கள் அவனுக்கு முந்தி பேசுவதில்லை மேலும் அவர்கள் அவனது கட்டளைகளின் படியே செயலாற்றுகின்றனர். அவர்களுக்கு**

**முன்னுள்ளவற்றையும் அவன் அறிகிறான். அவன் விரும்பியவருக்கேயன்றி வேறோருவருக்காகவும் அவர்கள் பரிந்து பேசுவதில்லை மேலும் அவர்கள் அவனுக்குப் பயந்து நடுங்கிக் கொண்டிருக்கின்றனர்." (21:27-29).**

நமக்கு தெரிந்தது போன்று கடந்தகாலகட்டங்களில் சில சமுதாயங்கள் தங்களது தீர்க்கத்தரிசிகளை அல்லது தூதர்களை இறைகுமாரன் என்று அழைத்துவந்தனர். ஆனால் இவ்வசனம் மனிதகுலத்தின் கண்களை திறக்க வைக்கும் ஒன்றாக அமைந்துள்ளது. ஏனெனில் இறைவனுக்கு ஒரு மகன் இருக்கிறான் என்பதும், அல்லது ஏதேனும் தரத்தில் இறைவனுக்கு இணைவைத்தல் என்பதும் உண்மையில் சாத்தானின் பொறியாகும். ஆகவே மனிதன் மிக ஜாக்கிரிதையுடன் இருக்கவேண்டும்.

மனிதனைப் போன்ற ஒரு உயரினத்தை, இறைவன் பெற்றெடுத்தான் என்பது இறைவனின் பெரும்ந்தன்மைக்கு உகுந்ததல்ல. அது மட்டுமன்றி, அல்லாஹ் கூறுகின்றான், எல்லா மனிதர்களும் அதாவது அவனது நபிமார்கள் உட்பட்ட அனைவரும் மனிதர்களாகியிருக்கின்றனர். அல்லாஹ்வின் அனுமதியின்றி, அவனது அங்கீகாரமின்றி அவர்களுக்கு எதுவும் செய்ய முடியாது. அவர்கள் அவனுக்குப் பயந்து நடுங்கிக் கொண்டிருக்கின்றனர். அல்லாஹ்விடமிருந்துள்ள அனுமதியை பெறாமல், எதுவொன்றும் செய்ய அவர்களுக்கு இயலாது.

எனவே அல்லாஹ்வின் முன்அனுமதி இல்லாமல், எந்த மனிதனும் மற்றொரு மனிதனுக்கு பரிந்து பேச முடியாது. அதற்கான அனுமதி மரணத்திற்குபிறகு நாம் பெறும் ஆன்மீக உடலுக்கு கிடைக்கிறது. அதை போன்றே மறுமையில் ஒரு நபியின் ஆன்மீக உடலுக்கோ அல்லது ஒரு மலக்கிற்கோ அல்லாஹ்வின் முன்அனுமதியில்லாமல் எவரை இரட்சிப்பதற்க்கும், அல்லது பரிந்து பேசுவதற்க்கும் முடியாது.

நாம் நினைவில் கொள்ளவேண்டும். அதாவது அல்லாஹ்வின் நபி, இன்னொரு நபருக்காக பரிந்து பேசுகிறார் என்பதன் அர்த்தம் இவ்வாறாகும். ஒரு நபியின் வாழ்நாளிலானாலும், அன்னார் இறை வெளிப்பாடுகளை பெற்று வந்த காலயளவிலானாலும், அல்லது அன்னாரின் மரணத்திற்கு பிறகானாலும் சரி,

உதாரணமாக, இறை விதியின்படி ஒருவரின் ஆன்மா எதாவது பிரச்சனையில் அகப்பட்டது என எண்ணுவோம். அந்நிலையில் கூட அல்லாஹ்வின் மாபெரும் இரக்கத்தன்மை அதில் ஈடுபட்டு, அவருக்கு மன்னிப்பை அளிப்பதற்கான வழிமுறைகளை வகுக்கின்றது. அதாவது அந்நபருக்கு பரிந்து பேசுவதற்கான அனுமதியை அல்லாஹ் தனது நபிக்கோ அல்லது கலீ∴பாவுக்கோ அளிகின்றான். உண்மையில் அந்நபரை மன்னிக்க வேண்டும் என்பது ஏற்கனவே அல்லாஹ் எடுத்த முடிவாகும். ஆனால் இந்த அருளுக்குரிய நிகழ்வுக்கு அல்லாஹ் தனது தூதர்களை பரிந்து பேசுகின்றவர்களாக தேர்வுசெய்கின்றான். ஏனெனில் தனது தூதர்களை எந்த அளவிற்கு தான் நேசித்திருந்தேன் என்பதை அம்மக்களுக்கு புரிய வைப்பதற்காகவும், தனது முன்னிலையில் அவர்களின் பதவி மிக உயரியது என்பதை அம்மக்களை உணரவைப்பதற்காகவும், தனது பிரத்தியேகமான பிரதிநிதிகள் என்ற நிலையில் அவர்களின் பக்தி செயல்களும் கீழ்படிதலும் எந்த அளவிற்கு உன்தமானது என்பதன்பால் அம்மக்களின் கவனத்தை ஈர்பதற்காகவும் ஷபா அத் அல்லது பரிந்து பேசுதல் என்னும் அருளை நபி மற்றும் கலீ∴பாக்களுக்கு அவன் வழங்கியிருக்கின்றான்.

ஒரு நபியின் அல்லது ஒரு கலீ∴பத்துல்லாஹ்வின் வாழ்நாளில் பரிந்துரை என்னும் இந்த சிறப்பான அனுமதியை அல்லாஹ் அளிக்கிறான் என்பது அவனுடைய உண்மைக்கு அது ஒரு சான்றாக இயங்குகின்றது. அல்லாஹ் இருக்கிறான் என்பதை மிக தெளிவாக காட்டும் அந்த சான்றை அவன் பயன்படுத்துகின்றான். அந்த சான்று மூலம் தனது அருகாமையினை அம்மக்களுக்கு அவன் வெளிப்படுத்தி காட்டுகின்றான். எல்லா நபிமார்களும் முஜத்தீதுமார்களும் தங்களது வாழ்நாளில் இத்தகைய அருளுக்கு ஆளாகி விடுகின்றனர். அல்லாஹ் நாடினால், அவர்களின் மரணத்திற்குபிறகும் இத்தகைய அருட்களுக்கு அவர்கள் ஆளாகிவிடுவார்கள். அவன் நாடுகின்றவர்களுக்கு எப்போது, எங்கு, எது, அவசியமோ அப்போது, அங்கு, அதனை அவன் அவர்களுக்கு வழங்குகின்றான்.

உதாரணமாக அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக பதிவு செய்யப்பட்டிருக்கின்றது.

**“அல்லாஹ் எனக்கு இரண்டுவகையான அருள் நிறைந்த வரத்தை அளித்து, அதிலொன்றை தேர்வு செய்ய கூறினான். ஒன்று பரிந்து பேசுபவர் என்னும் அதிகாரம் வேண்டுமா? அல்லது எந்த விதமான கணக்கும் கேட்க்காமல், உமது சமூதாயத்தை சார்ந்த பகுதிமக்களை சொர்க்கத்தில் அனுமதிக்க வேண்டுமா? நான் பரிந்து பேசுபவர் என்னும் அதிகாரத்தை தேர்வு செய்தேன். ஏனெனில், அதுவே மிக முக்கியத்துவம் மற்றும் பயனளிப்பதுமாக இருக்கின்றது. நான் பரிந்து பேசுவது பயபக்தியுடைய முஸ்ஸீம்களுக்கு என்று நீங்கள் எண்ணுகின்றீர்களா? அல்ல, மாறாக இது பாவிகளுக்குரியதாகும். அவர்கள் பாவத்தில் மூழ்கி போய்விட்டனர். மிக பெரிய பாவங்கள் செய்திருக்கின்றனர். (இப்னுமாஜ, அஹ்மது)**

ஆனால் அல்லாஹ் அனுமதி வழங்காமலும் இத்தகைய பரிந்து பேசுதல் நிகழ்கிறது. மனிதர் என்ற நிலையில் அவர்களில் காணப்படும் இரக்கம் மட்டுமின்றி இறை பிரதிநிதி என்ற நிலையில் அவர்களிடம் நெருக்கமாக இருக்கும் மக்களின் பாவங்களை மன்னிப்பதற்காக அவர்கள் அல்லாஹ்விடம் வேண்டுகின்றனர். அதாவது இரத்தபந்தம் மற்றும் உடையவர்களின் பாவமன்னிப்புக்காக அவர்கள் பிரார்த்தனை செய்கின்றனர். ஹஸ்ரத் இப்ராஹீம் நபி (அலை) அவர்களின் உதாரணம் வழியாக இதனை நமக்கு தெளிவாக புரிந்து கொள்ளலாம். அன்னார் தனது தந்தையின் பாவமன்னிப்புக்காக அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்தார். அன்னாரின் தந்தை உருவங்களை தயாரிப்பவரும், உருவ வணக்கம் செய்பவருமாக இருந்தார். உருவ வணக்கம என்பது அல்லாஹ் பார்வையில் வெறுக்கப்பட்ட ஒன்று என அன்னாரின் இதயம் நன்கு உணர்ந்திருந்தும் தனது தந்தையின் பாவ மன்னிப்புக்காக அல்லாஹ்விடம் வேண்டிக்கொண்டார். ஆனால் அல்லாஹ் அன்னாரின் பிரார்த்தனையை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் தனது தூதராகிய ஹஸ்ரத் இப்ராஹீம் நபி (அலை) அவர்களின் மென்மை வாய்ந்த உள்ளம் மற்றும் தூய்மையினை அவன் அங்கீகரித்தான்.

அல்லாஹ் கூறுகிறான்.

**“இப்ராஹீம் தம்முடைய தந்தையாரிடம் அளித்திருந்த ஒரு வாக்குறதியினால்தான் இவர் அவருக்காகப் பாவமன்னிப்புக் கோரினார். ஆனால் அவர் அல்லாஹ்வின் பகைவராகவார் என்பது அவருக்கு தெரிந்தபோது அவர்**

**அதிலிருந்து முழுமையாக விலகிக்கொண்டார். இப்றாஹீம் மிகவும் மென்மைவாய்ந்த உள்ளத்தைக் கொண்டவராயும் அறிவு படைத்தவராயும் விளங்கினார்.”**

அதைப் போன்றே ஹஸ்ரத் நூஹ் நபி (அலை) அவர்களின் உதாரணமும் உள்ளன. ஹஸ்ரத் நூஹ் நபி (அலை) அவர்கள் தனது அவநம்பிக்கையாளரான மகனுக்காக பிரார்த்தனை செய்தார் மற்றும் பரிந்து பேசினார். ஆனால் அல்லாஹ் அன்னாரை கண்டித்தான். அல்லாஹ்வின் பார்வையில் அது ஒரு பொருத்தமற்ற கோரிக்கையாக இருந்தது. அல்லாஹ் ஒருவன் மட்டுமே ஒரு மனிதனைப்பற்றி நன்கு அறிந்தவன். ஒரு நபிக்கு கூட ஒரு மனிதனைக் குறித்து அறிய முடியாது. அல்லாஹ், ஹஸ்ரத் நூஹ் நபி (அலை) அவர்களிடம் கூறுகின்றான். அதாவது **“அவன் உம்முடைய மகனல்ல. உம்முடைய படகுக்குள் நுழைந்தவர்கள் மட்டுமே உம் குடும்பத்தினர்.”**

அதைப் போன்ற இரண்டு காரியங்களில் நான் பரிந்து பேசுவதற்கு முயற்சித்த போது, இரண்டு முறையும் அல்லாஹ் என்னை கண்டித்தான். ஹஸ்ரத் நூஹ் நபி (அலை) அவர்கள் இன்று வாழ்ந்திருந்தால், இறை கண்டனம் கொடுக்கும் வேதனை எந்த அளவிற்கு பெரிது என்பதை உணர்ந்திருப்பார். உண்மையில், இறைவனிடமிருந்து வரும் கண்டனத்தை விட மிக சிறந்தது, இந்த பூமியிலுள்ள எல்லா விதமான சோதனைகளையும் கடந்து செல்வது தான்.

**“வானங்களில் எத்தனையோ வானவர்கள் இருக்கின்றனர் என்றாலும் தன் விருப்பத்திற்கும் திருப்திக்கும் உரியவருக்காக அல்லாஹ் அனுமதி வழங்கியதன் பின்னரேயன்றி அவர்களின் பரிந்துரை எந்தப் பயனையும் அளிப்பதில்லை” (53:27)**

மேல்கூறிய திருமறை வசனத்தின் விளக்கமானது, என் முன் எழுப்பிய ஒரு கேள்விக்கு கூட அவ்விளக்கம் மிக சிறந்த நிலையிலான பதிலாக அமைந்துள்ளது. எனவே எல்லா மக்களும் அதிலிருந்து பயன் பெற வேண்டுமென எண்ணி, இன்றைய எனது வெள்ளிக் கிழமை பேருரை வழியாக அதனை நான் விவரிக்கின்றேன்.

நம் கவனத்தை ஈர்க்கும் இந்த சிறப்பான வசனத்தில் குறிப்பிடபட்டுள்ள இந்த ஷபாஅத் அல்லது பரிந்துரை என்பது மலக்குகளுக்கு மட்டும் உரியதாகும். இந்த சிறப்பான வசனத்தில் காணும் மலக்கின் (Malakin) என்ற வார்த்தையினை ˙மலக்குகளுக்கும் மனிதர்களுக்கும் பயன்படுத்தலாம். மனிதர்களாகிய மலக்குகள் என்பது அல்லாஹ்வின் நபிமார்கள் ஆவார்கள். இந்த மனிதர்களாகிய மலக்குகள் என்ற வார்த்தையினை சாதாரண மக்களுக்கும் பயன்படுத்தலாம் என்றிருந்தாலும் சதாரணமான ஆண்கள் மற்றும் பெண்களுக்கு அது பொருந்தாத ஒன்றாகும். ஏனெனில் அவ்வசனத்திற்குபின் அல்லாஹ் தொடர்ந்து கூறுகின்றான்.

**"மறுமையில் நம்பிக்கை கொள்ளாதவர்கள், வானவர்களுக்குப் பெண்களின் பெர்களைக் சூட்டுகின்றானர். ஆனால் அதனைப் பற்றிய எந்த அறிவும் அவர்களுக்கு இல்லை. யூகத்தைத்ததான் அவர்கள் பின்பற்றுகின்றனர். யூகம் உண்மைக்கு எதிரில் எந்தப் பயனையும் அளிப்பதில்லை"** (53:28-9)

எந்த அளவு பயபக்கியுள்ளவர்களாகயிருந்தாலும் சரி, பெண்களை நபிமார்களாக தேர்ந்தெடுப்பதில்லை என்பதை நமக்கு மறுக்க முடியாது.

அல்லாஹ்வின் பார்வையில், மிக உன்னதமான நிலையினை பெண்களுக்கு அடை முடியும். நபிமார்களாகுவதற்கு அவர்களுக்கு முடியாது என்றிருந்தாலும் அந்த நபிமார்களின் அன்னையாகுவதற்கு அவர்களுக்கு முடியும். அந்த மாபொரும் அருளுக்கு அவர்கள் ஆளாகிவிடுகின்றனர். எல்லா மனிதர்களுக்கும் அன்னை இருப்பதுபோன்று எல்லா நபிமார்களுக்கும் அன்னை உண்டு.

சில குறிப்பான நபர்களுக்கு சில சிறப்பான பதவியினை அவன் அளிக்கின்றான். அதாவது உலகமக்களின் சீர்திருத்தம் என்னும் மாபெரும் பணிக்காக அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நியமித்தது போன்றும், அன்னாருக்கு பிறகு அன்னாரின் பிரதிநிதிகள் மற்றும் உதவியராளராக திருக்குர்- ஆனை மெய்பிக்கும் நபிமார்கள் மற்றும் முஜத்தீதுகளை நியமிப்பது போன்றும், சில குறிப்பான நபர்களுக்கு சில சிறப்பான பதவியனை அவன் வழங்குகின்றான்.

சூரத்துல் அன்னஜ்மில் 27-ம் வசனத்தில் அல்லாஹ் கூறியிருப்பதிலிருந்து நமக்கு உணரலாம். அதாவது மனிதர்களுக்காக, மலக்குகளுக்கு பரிந்துரைக்க முடியும். எந்த நேரத்திலானாலும் சரி, பயபக்தியுடைய ஆண், பெண் மற்றும் குழந்தைகளின் ஒன்று கூடுகையின்போது அவர்களை சுற்றி மலக்குகள் நிலைகொள்வார்கள். ஒரு வலுவான சபையைப் போன்று அது அமைந்திருக்கும் அவர்களுக்காக மலக்குகளும் பிரார்த்தனையில் மூழ்கிவிடுவார்கள். அவர்களின் பௌதீக மற்றும் ஆன்மீக மேன்மைக்காகவும் வெற்றிக்காகவும் மலக்குகள் பிராத்தனை செய்வார்கள். மலக்குகள் மத்தியிலும் மனிதர்களைப் போல சிலர் சிலரைவிட உயரிய பதவியினை கொண்டுள்ளனர். உதாரணமாக ஜீப்ரீல் (அலை) மையும், மீக்காயீல் (அலை) மையும், இஸ்ராபீல் (அலை) மையும் போன்று அவர்கள் மத்தியிலும் சிலர் சிலரை விட உன்னதமான பதவியினை அடைந்துள்ளனர்.

ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் இவ்வாறு பிராத்தனை செய்ததாக காணலாம் **“எனது அல்லாஹ்! ஜிப்ரீலின் இறைவா, மீக்காயிலுனுடையவும் இஸ்ராபீனுடையவும் இறவைா! மறைந்திருப்பதையும் வெளிப்படுவதையும் அறிந்தவனே! உன் அடியார்கள் வேறுபடுகின்ற காரியங்களுக்கு விதி கூறுபவன் நீ மட்டுமாகிறாய்! அவர்கள் வேறுபடும் காரியங்களுக்கு விதி கூற நீ எனக்கு வழிகாட்டுவாயாக! நீ நாடுகின்றவர்களுக்கு நீ நேர்வழியினை காட்டுபவனாக இருக்கின்றாய்” (முஸ்லீம்)**

ஆகவே, ஷபாஅத் அல்லது பரிந்துரைக்கான அனுமதி, அல்லாஹ் தனது தேர்ந்தெடுக்கப்பட்ட அடியார்களுக்கு வழங்கும் ஒன்றாகும் என்பதை இஸ்லாமிய போதனைகளிலிருந்து நாம் கற்றிருக்கின்றோம். அது நபிமார்களுக்கும் ஆகலாம், மலக்குகளுக்கும் ஆகலாம். இந்த இரு பிருவினரும் பிற மக்களுக்காக பிரார்த்தனை வடிவில் பரிந்துரைப்பது எதன் அடிப்படையில் என்றால், அல்லாஹ் இக்காரியத்தில் அவர்களுக்குவழங்கும் வழிகாட்டுதலுக்கு ஏற்றவாறாகும். இந்த பரிந்துரையானது கடுமையான தண்டனை மற்றும் கடுமையான ஆபத்திற்கு ஆளாகின்றவர்களுக்கும், அதற்கான வாய்ப்பு இருப்போர்களுக்குமாக செய்யப்படுகிறது. இந்த பரிந்துரை பூமியில் வைத்தாகலாம். அதாவது ஒரு இறைத் தூதரின் வாழ்நாளிலோ அல்லது ஒரு கலீ.்.பத்துல்லாஹ்வின் வாழ்நாளிலோ, அதுமட்டுமல்லாமல் ஒரு முஜத்தீதின் வாழ்நாளிலோ, இத்தகைய

பரிந்துரை நிகழலாம். ஆனால் அது பெரும்பாலும் மறுவுலகில் வைத்து நிகழ்கிறது.

அல்லாஹ், அனைத்தையும் மன்னிப்பவனாகயிருக்கின்றான் என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். அவன் நாடுகின்றவர்களை அவன் மன்னிக்கிறான். எந்த கடுமையான பாவமானலும், சிறிய பாவமனாலும் அவனுக்கு மன்னிக்க முடியும். ஆனால் சீர்க்கை (சிலைவணக்கம்) அவன் மன்னிப்பதில்லை அதாவது சிலை வணக்கம் செய்யபவர், அவர் மரணமடைவதற்கு முன்பு பவமன்னிப்பை கோரி, மிக சிறந்த முறையில் ஒரு மாற்றத்தை தம்மிடம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அல்லாமல் அவன் மன்னிப்பதில்லை. சிலை வணக்கம் செய்வோருக்கு அவன் மன்னிப்பை அளிப்பவனாகயிருந்திருந்தால் ஹஸ்ரத் இப்ராஹீம் நபி (அலை) அவர்களின் தந்தையாரை அவன் மன்னித்திருப்பான். ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் காலத்தில் வாழ்ந்திருந்த பார்வோனை அவன் மன்னித்திருப்பான். மட்டுமன்றி ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் பெரியப்பாவாகிய அபூதாலிபை அவன் மன்னித்திருப்பான். அன்னார் திருநபி (ஸல்) அவர்களை மகனைப் போல நேசித்திருந்தார். ஆனால் அவர் மக்களை அஞ்சினார். ஏக இறைவனாகிய அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்ளவில்லை. அன்னாரின் சகோதரனின் புதல்வனாகிய அல்லாஹ்வின் நபி மீது நம்பிக்கை கொள்ளவில்லை.

இது ஒருபோதும் ஒரு தவறல்ல, நான் உறுதியுடன் கூறுகின்றேன். ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் வருகைக்குபிறகு, அன்னாரின் சமுதாயத்தில் வருகை தரும் அருளுக்குரிய பிரதிநிதிகளும் இஸ்லாமிய முஜத்தீதுகளும் மறுமையில் ஷபாஅத்தின் அருளை பெறுவார்கள். அவர்களின் காலகட்டத்தை சார்ந்த மக்களுக்காக பரிந்துரைப்பார்கள். ஏனெனில் அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) மீது வைத்திருந்த ஆழமான உறவின் காரணமாக பரிந்துரை என்னும் அருளை அவர்கள் பெறுகின்றனர்.

அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் **“என் சமுதாயத்தை சார்ந்த ஒரு மனிதனின் பரிந்துரையின் காரணமாக, பனூதமீம் கோத்திரத்தை சார்ந்த மக்களை விட அதிகமான மக்கள் எனது சமுதாயத்திலிருந்து சொர்கத்தில் நுழைவார்கள். அந்நேரம் வினவினார்கள். அல்லாஹ்வின் தூதரே! அது உங்களை தவிர வேறு யார்? திரு நபி (ஸல்)**

**பதிலளித்தார். “நான் அல்ல, அது இன்னொருவர்”** (இப்னுமாஜ, அஹமது) திருமறையில் அல்லாஹ் கூறுகின்றான்.

**“அந்நாளில் அளவற்ற அருளாளனாகிய இறைவன் எவருக்கு பரிந்து பேசுவதற்கு அனுமதி வழங்கியுள்ளானோ, எவருக்காக பேசுவதை அவன் விரும்புவானோ அவருக்கேயன்றி வேறெவருக்கும் பரிந்துரை பயனக்காது” (20:110)**

மற்றொருவருக்கு ஆதரவாக பரிந்துரைக்க அல்லாஹ் அனுமதி அளிக்கின்றான் என்றால், தீங்கிழைத்த அந்நபருக்கு மன்னிப்பை வழங்க வேண்டும் என அல்லாஹ் விரும்புவதனாலாகும். அந்நிலையில்தான் தனது தூதர்களுக்கு பரிந்துரைக்கான அனுமதியை அவன் வழங்குகின்றான். இது தனது தூதர்கள் மீதான தனது நட்பின் பிரதிபலித்தலாக அமைந்துள்ளது.

ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் சமுதாயத்திற்கு இந்த முக்கியமான காரியத்தை உணர்ந்து வாழ்வதற்கான உதவியினை அல்லாஹ் வழங்குவானாக! ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் பெற்றுள்ள ஷபாஅத் என்னும் அருளினை எல்லோருக்கும் பெற முடியும் என்றும், அந்த அருளுக்கு ஒரு எல்லையில்லை என்றும் கூறி குழப்பங்களை உண்டு செய்யாதீர்கள். தனது அடியார்களின் இதயங்களை மிக நன்கு அறிந்தவன் அல்லாஹ் ஒருவனாவான். எவருடைய இதயம் பாவமன்னியை தேடுகிறது என்றும், எவருடைய இதயம் பாவமன்னிப்பை தேடவில்லை என்றும் மிக நன்கு அறிபவன் அல்லாஹ் ஒருவனாவான். முழுமையாக, எல்லாம் அல்லாஹ்வின் கரங்களிலாகும். இவ்வுலகிலும் மறுவுலகிலும் அவனுடைய ஆட்சி மட்டும்தான் காணலாம். அனைத்து விதமான படைப்பினங்களுக்கும் அவன் விதி கூறுபவனாக இருக்கின்றான். நிச்சயமாக உண்மையான வழி என்பது அல்லாஹ்வின் வழி மட்டுமாகும். ஆமீன் சும்ம ஆமீன்.

**Translated by:**
*Naib Amir - Azim Ahmad*
*7339689239*

## ISSUED BY

**R. JAMALUDDIN RAOTHER SAHIB**
Amir Kerala South Zone, India
Kerala contact
No: 9447001832

**SIRAJ DEEN SAHIB**
Amir Tamilnadu state, India
Tamilnadu Contact
No: 7502272774

**PUBLISHED BY:**
**JAMAAT-UL-SAHIH-AL-ISLAM**
**KALIAKKAVILAI BRANCH**
**(TAMILNADU AND KERALA BORDER)**
**Ph No: 9789180817, 9171977109**